Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 030 | வியாழக்கிழமை Thursday | 30.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## மேற்கு வங்கத்தில் இறுதிகட்ட தேர்தல்:

# 142 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடந்தது



கொல்கத்தா: மேற்கு வங்கத்தில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. மதியம் 1 மணி வரை 61.11 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

குறிப்பாக, மேற்கு வங்கத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் 5 மாவட்டங்களுக்கும் வாக்குப்பதிவு நடைபெற்றது.

தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா, புதுச்சேரி, அசாம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டமன்றத் தேர்தல் தேதியை கடந்த மார்ச் மாதம் தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

அதன்படி, புதுச்சேரி, கேரளா, அசாம் ஆகிய மாநிலங்களுக்கு கடந்த 9ஆம் தேதி ஒரே கட்டமாகதேர்தல்நடைபெற்று முடிந்தது. இதன் தொடர்ச்சியாக, தமிழகத்தில்உள்ள234தொகுதிகளுக்கும்கடந்த23ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. இதில் 85.10 சதவீதம் வாக்குகள் பதிவாகின.

அதேபோல, அன்றைய தினம் மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 சட்டமன்றத் தொகுதிகளில் 152 தொகுதிகளுக்கு முதற்கட்ட தேர்தல் நடைபெற்றது. இதில் 93.19 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன.

இந்நிலையில், மேற்கு வங்கத்தில் மீதமுள்ள 142 சட்டமன்றத் தொகுதிகளுக்கான கடைசி கட்ட வாக்குப்பதிவு, காலை 7 மணிக்கு தொடங்கிவிறுவிறுப்பாக நடைபெற்றது.

முதற்கட்ட தேர்தலில் எவ்வாறு மக்கள் அதிக அளவில் திரண்டு வந்து வாக்களித்தார்களோ, அதை விட அதிக கூட்டம் ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் காண முடிகிறது. மொத்தம் 41,001 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கடிசை கட்ட தேர்தலில் 3.22 கோடி பேர் வாக்களிக்கவுள்ளனர். பதற்றமான வாக்குச்சாவடிகளில் துணை ராணுவப் படையினர் குவிக்கப்பட்டு ள்ளனர். இன்றைய தேர்தலில், மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி போட்டியிடும் பவானிபூர் தொகுதிக்கும் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அங்கு மம்தாவுக்கு எதிராக பாஜகவின் சுவேந்து அதிகாரி களமிறங்கியுள்ளார்.

பவானிபூர் தொகுதியில் இருவருக்குமே பெரும் செல்வாக்கு இருப்பதால், கடும் போட்டி நிலவி வருகிறது.

வெற்றியை தீர்மானிக்கும் 5 மாவட்டங்கள் மேற்கு வங்கத்தை பொறுத்தவரை ஆளும்திரிணமூல்காங்கிரஸுக்கும், எதிர்க்கட்சியான பாஜகவுக்கும் இடையேதான் நேரடி போட்டி நிலவுகிறது.

மேற்குவங்கத்தில்யார் ஆட்சியமைப்பது என்பதை கொல்கத்தா, ஹவுரா,24 வடக்குபர்கானாஸ், 24 தெற்கு பர்கானாஸ், நாடிய ஆகிய 5 மாவட்டங்கள்தான் தீர்மானிக்கின்றன. இந்நிலையில், இந்த 5 மாவட்டங்களிலும் வாக்குப்பதிவு நடைபெற்றது.. இந்த மாவட்டங்களில் உள்ள அதிக அளவிலான தொகுதிகளை எந்தக் கட்சி கைப்பற்றுகிறதோ, அந்தக் கட்சிதான் ஆளுங்கட்சியாக அமரும் என்பது வரலாறு. இதனிடையே, மேற்கு வங்கத்தில் காலை 1 மணி வரை 61.11 சதவீத வாக்குள் பதிவாகியுள்ளன.

# “உ.பி.யை இழிவுபடுத்தும் திமுகவுடன் சமாஜ்வாதி கட்சி கைகோத்துள்ளது” பிரதமர் மோடி குற்றச்சாட்டு



ஹர்தோய்: உத்தரப் பிரதேசத்தை இழிவாகப் பேசி அரசியல் செய்யும் திமுகவுடன், சமாஜ்வாதி கட்சி கைகோத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்து ள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் ரூ.36,230 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 594 கிலோ மீட்டர் தொலைவிலான கங்கா ஆறுவழி விரைவுச்சாலை திட்டத்தை அம்மாநிலத்தின் ஹர்தோய் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர்நரேந்திரமோடி, "மேற்கு வங்கத்தில் தற்போது இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெற்று வருகிறது. முதல் கட்டத்தைப் போலவே இரண்டாம் கட்டத்திலும் மக்கள் பெருமளவில் தங்கள் வாக்குகளை செலுத்தி வருகிறார்கள். 60, 70 வருடங்களாக நினைத்துக்கூடப் பார்க்க முடியாத வகையில் அச்சமற்ற ஒரு சூழலில் வங்கத்தில் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. எவ்வித அச்சமும் இன்றி மக்கள் வாக்குகளை செலுத்தி வருகின்றனர். நேற்றுதான் குஜராத் மாநகராட்சி, நகராட்சி, மாவட்ட பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து, வட்டாரப் பஞ்சாயத்து ஆகியவற்றுக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகின. இதில், 80 முதல் 85% வரையிலான நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகளில் பாஜக வெற்றி பெற்றுள்ளது. ஐந்து மாநிலங்களில் நடைபெறும் தேர்தல்களில் பாஜக ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பதிவு செய்யப் போகிறது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். மே 4-ம் தேதி வெளியாகும் தேர்தல் முடிவுகள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நமது உறுதியை மேலும் வலுப்படுத்தும். தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள கங்கா விரைவுச் சாலை மீரட்டைத் தாண்டி ஹரித்துவார் வரை நீட்டிக்கப்படும். இதன் பயன்பாட்டை மேம்படுத்தும் வகையில், ஃபரூக்காபாத் இணைப்பு விரைவுச் சாலை ஒன்று அமைக்கப்படும். விரைவுச்சாலைகளுடன் இணைக்கப்படும். இதுவே இரட்டை இன்ஜின் அரசின் தொலைநோக்குப் பார்வை. இதுவே பாஜக அரசின் செயல் வேகம். இதுவே பாஜக அரசின் பணிமுறை. சில நாட்களுக்கு முன்புதான் டெல்லி - டேராடூன் விரைவுச்சாலையை திறந்து வைக்கும் வாய்ப்புஎனக்குகிடைத்தது. ஒரு சாலையை அமைக்க பல பத்தாண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்த காலம் இப்போது மலையேறிவிட்டது. சாலைத்திட்டம் அறிவிக்கப்பட்டால் அது பல ஆண்டுகள் இழுத்தடிக்கப்படும். பல அரசுகள் மாறி மாறி வந்தாலும் அந்த திட்டத்தில் எவ்வித முன்னேற்றமும் தென்படாது. ஆனால், இரட்டை இன்ஜின் அரசில் அடிக்கல் நாட்டுவதும் திட்டத்தை திறந்து வைப்பதும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செவ்வனே நிறைவு செய்யப்படுகின்றன. சமாஜ்வாதி கட்சி, உத்தரப்பிரதேசத்தின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடையவில்லை. அவர்கள் உத்தரப் பிரதேசத்தை மீண்டும் பழைய இருண்ட காலத்துக்கே இழுத்துச் செல்ல விரும்புகிறார்கள். அவர்கள் மீண்டும் சமூகத்தைபிளவுபடுத்தி சிதைக்க துடிக்கிறார்கள். சமாஜ்வாதி கட்சிக்கு வளர்ச்சிக்கு; பெண்களுக்கு எதிரானது. சமீபத்தில் சமாஜ்வாதி கட்சி, காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் உண்மையான முகத்தை நாடு மீண்டும் ஒருமுறை கண்டது.

மத்தியில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. அந்த மசோதா நிறைவேறி இருந்தால் 2029 ம் ஆண்டு தேர்தலில் இருந்தே மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளில் நமது தாய்மார்கள் மற்றும் சகோதரிகளுக்கு 33% இட ஒதுக்கீடு கிடைத்திருக்கும். அவர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் சென்றிருப்பார்கள். இத்தனைக்கும், விகிதாச்சாரத்தில் எந்த மாற்றமும் இன்றி இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று நாங்கள் நாடாளுமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருந்தோம்.

ஆனால், உத்தரப் பிரதேசத்தை இழிவாகப் பேசி அரசியல் செய்யும் திமுக போன்ற கட்சிகள், உத்தரப்பிரதேசத்துக்கான இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் போவதாகக் கூறி எதிர்த்தன. நாடாளுமன்றத்தில் அந்த கட்சிகளின் மனநிலையே சமாஜ்வாதி கட்சியின் குரலாகவும் ஒலித்தது. இங்கிருந்து (உத்தரப்பிரதசேத்தில் இருந்து) உங்கள் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு நாடாளு மன்றத்துக்குச் செல்லும் சமாஜ்வாதி கட்சி உறுப்பினர்கள், அங்கே உத்தரப் பிரதேச மக்களை இழிவாகப் பேசுபவர்களுடன் கைகோத்து நிற்கிறா ர்கள். சமாஜ்வாதி கட்சியால் ஒருபோதும் வாரிசு அரசியலையும் சாதிய அரசியலையும் கடந்து மேலே உயரவே முடியாது. உலகம் முழுவதும் போர், அமைதியின்மை மற்றும் நிலையற்ற தன்மையால் எவ்வாறு சிக்கித் தவிக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் காண்கிறீர்கள். உலகின் முக்கிய நாடுகளின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. ஆனால் இந்தியா மட்டும் தனது வளர்ச்சிப் பாதையில் அதே வேகத்துடன் முன்னேறிச் செல்கிறது. இந்தியாவின் இந்த வளர்ச்சியை வெளிநாட்டு எதிரிகள் விரும்புவதில்லை. அதேநேரம், அதிகார வெறி கொண்ட உள்நாட்டு சக்திகள் சிலவும் இந்தியாவை வீழ்த்த முயன்று வருகின்றன. இருப்பினும் நாம் பாதுகாப்பாக இருப்பது மட்டுமல்லாமல், வளர்ச்சியில் புதிய சாதனைகளையும் படைத்து வருகிறோம். தற்சார்பு இந்தியா எனும் லட்சியப் பயணத்தை நோக்கி நாம் உறுதியுடன் முன்னேறிச் செல்கிறோம். நாம் மிகவும் நவீன உள்கட்டமைப்பு வசதிகளை கட்டமைத்து வருகிறோம். அந்த திசையில் நாம் எடுத்து வைத்துள்ள மற்றொரு வலுவானஅடியேகங்கா விரைவுச்சாலை திட்டம்" என தெரிவித்தார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

## வாக்கு எண்ணிக்கை மையங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள் கணினி குலுக்கல் முறையில் தேர்வு



சென்னை மாவட்டத்தில் வாக்கு எண்ணிக்கை மையங்களில் பணிபுரியவுள்ள மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண்பார்வையாளர்களை முதற்கட்டமாக சட்டமன்றத் தொகுதி வாரியாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் இன்று நடைபெற்றது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, சென்னை ராணி மேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் பணிபுரியவுள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், உதவியாள ர்கள் மற்றும் நுண் பார்வையாளர்களை முதற்கட்டமாக சட்டமன்றத் தொகுதி வாரியாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன் தலைமையில் சென்னை மாவட்டத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், திரு.வி.க.நகர், ராயபுரம், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ராணி மேரி கல்லூரி வாக்கு எண்ணும் மையத்திலும், பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணாநகர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைலயோலா கல்லூரி வாக்கு எண்ணும் மையத்திலும், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், மயிலாப்பூர் மற்றும் வேளச்சேரி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அண்ணா பல்கலைக்கழக வாக்கு எண்ணும் மையத்திலும் உள்ள பாதுகாப்பு அறைகளில் பாதுகாப்பாக தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில்சீல்வைக்கப்பட்டு, மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 04.05.2026 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளதை முன்னிட்டு, வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வை யாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்கள் என மொத்தம் 1,005 நபர்களை முதற்கட்டமாக சட்டமன்றத் தொகுதி வாரியாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் வாக்கு எண்ணிக்கை மையங்களில் நடைமுறைகள் தொடர்பாக தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு ஆலோசனை மற்றும் அறிவுரைகளை வழங்கினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group. https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கலிங்கப்பட்டி ஊராட்சி வீரணாபுரம் வீரசக்தி விநாயகர் ஆலய குடமுழுக்கு விழா

## மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பங்கேற்பு



தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டி ஊராட்சி, வீரணாபுரம் கிராமம் முழுவதும் தேவேந்திரகுல வேளாளர் சமூக மக்கள் வாழும் கிராமமாகும்.

முன்னதாக வீரணாபுரம் கிராமத்திற்கு வந்த வைகோ அவர்களை

இக்கிராம மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தமது சொந்தச் செலவில் ஊரின் மையப் பகுதியில் வீரசக்தி விநாயகர் கோயிலைக் கட்டித் தந்துள்ளார்.

நேற்று (27.04.2026) காலை 9 மணி அளவில், இத்திருக் கோயில் குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ இதில் பங்கேற்று கலசத்தில் நீர் ஊற்றினார். தொடர்ந்து ஊரின் எல்லையில் உள்ள வீரகாளி அம்மன் கோயில் குடமுழுக்கு நிகழ்விலும் பங்கேற்று சாமி தரிசனம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து தமது ஏற்பாட்டில் ஊர் மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் வைகோ தொடங்கி வைத்தார்.

மேள தாளங்கள் முழங்க ஆரத்தி எடுத்து ஊர் மக்கள் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் திமுக தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., மதிமுக துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் திருமலாபுரம் தி.மு. இராசேந்திரன், சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் சங்கை கணேசன், தென்காசி வடக்கு மாவட்ட மதிமுக செயலாளர்கள் இல.சுதாபாலசுப்பிரமணியன்,ஆர்.எஸ்.ரமேஷ், வேல்முருகன், ஒன்றியக் குழுத் தலைவர் விஜயலட்சுமி கனகராஜ், ஒன்றியச் செயலாளர்கள் சீனிவாசன், ராஜகோபால், திமுக ஒன்றியச் செயலாளர் சேர்மதுரை, ஒன்றியக் குழு உறுப்பினர் அருள்குமார், ஊராட்சி மன்றத் தலைவர் மணிமொழி சந்துரு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் பக்தர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கலப்பை மக்கள் இயக்க நிறுவன தலைவர் பி.டி. செல்வகுமாரை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்கள்

# உலக நன்மை வேண்டியும், உலகில் உள்ள அனைவரின் நலனுக்காகவும், செல்வம், ஆரோக்கியம், குடும்ப நலம், குழந்தைகள் வளர்ச்சி, மற்றும் தொழில் முன்னேற்றம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கேரள மாநிலத்தில் 4 நாட்கள் தொடர் யாகம் நடத்த திட்டம்



கோவை உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள பத்திரிக்கையாளர் மன்றத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய மஹா மண்டலேஸ்வரர் சுவாமிகள் பிரபாரா னந்தாசரஸ்வதி,மாதாஜி தேவி, ரஞ்சித் பாலாஜி ஆகியோர்கூறியதாவது..


உலக நன்மை வேண்டியும், பாரதத்தின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு கேரள மாநிலம்,திருச்சூர்,இரிஞ்சாலக்குடா எனும் பகுதியில், 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்த முருகன் திருக்கோவில் அமைந்துள்ளது. இந்த திருக்கோவில் வளாகத்தில், வரும் மே மாதம் 18ம் தேதி முதல் 21ம் தேதி வரை, ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம தன்வந்திரி மஹா யாகம் நடைபெற உள்ளது. இந்த சிறப்பு யாகத்தில் கலந்து கொள்ள இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களில் இருந்து 60க்கும் மேற்பட்ட சந்நியாசிகள், உபாஸகர்கள், மற்றும் 10,000த்திற்க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளதாக தெரிவித்தனர். இந்த யாகம் நடத்த முக்கிய நோக்கமாக, உலக நன்மை அடைய வேண்டும்,இப்பூவுலகில் உள்ள அனைத்து ஜீவ ராசிகளும் இன்புற்று வாழ வேண்டும், என்பதை கருத்தில் கொண்டு நடத்த பட உள்ளது என்றனர்.மேலும் இத்தகைய தர்ம யுக பிரவேசிகா யாத்திரை, கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் நடைபெற உள்ளது என்று தெரிவித்தனர். இதில் அனைத்து பக்தர்களும் கலந்து கொள்ள வேண்டும்என்பதேஎங்களது நோக்கம் என்றனர்.மேலும்இந்தயாகத்தில் கலந்து கொள்ளும் அனைத்து பக்தர்களுக்கும் அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும், உணவுகளும் வழங்க வழி வகை செய்ய பட்டுள்ளது என தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாவூர்சத்திரம் அருகே சிறுமியை பாலியல் தொந்தரவு செய்த நபருக்கு 5 ஆண்டுகள் சிறை; ரூ.5 ஆயிரம் அபராதம்

## தென்காசி நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள லட்சுமியூரில் சிறுமியை பாலியல் தொந்தரவு செய்ததோடு அதனை தட்டிக் கேட்ட சிறுமியின் தாய் தந்தையரை அவதூறாக பேசி தாக்கிய நபருக்கு தென்காசி நீதிமன்றம் 5 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூபாய் 5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு அளித்தது.

பாவூர்சத்திரம் அருகே உள்ள லட்சுமியூர் முருகன் கோவில் தெருவை சேர்ந்த சண்முகசுந்தரம் - காளீஸ்வரி தம்பதியரின் மகள் 7 வயது சிறுமி கடந்த 12.02.2021 அன்று வீட்டில் தனியாக இருந்தபோது சிறுமியை



அதேப் பகுதியைச் சேர்ந்த அன்னப்பாண்டி என்பவரது மகன் ராஜ்குமார் (வயது 34) சிறுமியிடம்

செல்போனில் விளையாடலாம் என்று கூறி அழைத்து அவரை பாலியல் தொந்தரவு செய்துள்ளார். இதற்கு மறுப்பு தெரிவித்தசிறுமி இது பற்றி தனது தாயாரிடம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி சிறுமியின் தந்தை மற்றும் தாயார் ராஜ்குமாரிடம்

தட்டி கேட்டபோது பெண் என்றும் பாராமல் அவரது தாயை அவதூறாக பேசியதோடு அவரது தந்தையை கல் வீசி தாக்கியதோடு கம்பால் அடித்துள்ளார். இது பற்றி சிறுமியின் தாயார் ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து இது குறித்து விசாரணை நடத்திய ஆலங்குளம் அனைத்துமகளிர்காவல் நிலைய போலீசார் குற்றவாளி ராஜகுமாரை போக்சோ சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தென்காசி நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தநிலையில் நேற்று தென்காசி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி பி.ராஜவேலு எதிரி ராஜ்குமாருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூபாய் 5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார். இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞர் குட்டி என்ற மருதப்பன் ஆஜராகி வாதாடினார்.

# மதுரை உத்தங்குடி கள்ளழகர் தண்ணீர் பீச்சும் பக்தர்கள் சார்பாக 15 ஆம் ஆண்டு அன்னதானம் வழங்கும் விழா



மதுரை உத்தங்குடி அருள்மிகு ஸ்ரீ கள்ளழகர் தண்ணீர் பீச்சும் பக்தர்கள் சார்பாக அன்னதானம் வழங்குதல் 15 ஆம் ஆண்டு விழா 28/4/20186 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ மீனாட்சி திருக்கல்யாணம் அன்று பகல் 11 மணி அளவில் ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமதே ஸ்ரீ ஆதிகிருஷ்ணன் திருக்கோவிலில் வடக்கு பொன்மேனி கார்டன் பிருந்தாவனம் உத்தங்குடியில் மாபெரும் அன்னதானம் விழா நடைபெற்றது இதன் அறக்கட்டளை தலைவர் அ ரவி அவர்கள் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில் தொடர்ந்து 15 ஆண்டுகளாக அன்னதானம் வழங்கி வருகின்றார் கள்ளழகர் தண்ணீர் பீச்சும் குழு தலைவர் செயலாளர் திருவள்ளுவர் நற்பணி மன்ற செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் மதுரை யாதவர் கல்லூரி பொதுக்குழு உறுப்பினர், தேமுதிக கிழக்கு ஒன்றிய விவசாய அணி முன்னால் தலைவர், ஒன்பதாவது வார்டு வட்டச் செயலாளர்,மனித உரிமைகள் கழக உறுப்பினர்,ஆதி கிருஷ்ணன் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் போன்ற பல்வேறு சமூகப் பொறுப்புகளை வகுத்து வருகிறார் 2017 ஆம் ஆண்டு இந்த ஆதிக்கிருஷ்ணன் திருக்கோவில் பூமி பூஜை செய்யப்பட்டு 2021இல்கும்பாபிஷேகம் நடைபெற்றது . இதன் முன் மண்டபத்தை ரிஷி

புரமோட்டர்ஸ் பொறியாளர் கார்த்திகேயன் கட்டி கொடுத்தார். தொடர்ந்து 2021 இல் இருந்து இந்த ஆண்டு வரை அன்னதானம் இக்கோயிலிலேயே நடத்தப்பட்டு வருகிறது இதில் நண்பர்கள் உறவினர்கள் யாதவ சமுதாயத்தினர் ஒத்துழைப்போடு சிறப்பாக நடத்தி வருகிறார் இந்த அன்னதானத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்து வருகிறார்கள் இவ்வாறு தெரிவித்தார் உடன் வி.சசிகுமார், வி.அய்யனன், ஜெயபாண்டி ராஜா ஏ.மனோகர்,ஏ.ஆர்.ரெங்கன்,ராமலிங்கம் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கோவையில் கணவருடன் சேர்ந்து கொண்டு அண்ணனின்

# பெட்ரோல் பங்கை அபகரிக்க முயற்சி செய்த தங்கை மீது உரிய நடவடிக்கை எடுக்ககோரி பரபரப்பு புகார்




கோவை சக்தி சாலை கடத்தூர் பிரிவில் வெற்றி விநாயகர் ஏஜென்சிஸ் பாரத் பெட்ரோலியம் இயங்கி வருகிறது. இந்த பெட்ரோல் பங்க் இடத்தின் உரிமையாளரான மகேந்திர பிரபு என்பவர் கடந்த சில வருடங்களுக்கு முன்பு பெட்ரோல் பங்கின் உரிமத்தைதனது தங்கை யமுனா தேவியின் பெயரில் வாங்கியுள்ளார். தற்சமயம் யமுனாவிற்கு திருமணம் ஆனவுடன் தனது கணவருடன் சேர்ந்து கொண்டு இந்த பெட்ரோல் பங்க் தன்னுடையது என்று அடியாட்களை வைத்து மிரட்டியுள்ளார். அருகில் உள்ள காவல் நிலையத்தில் உரிமையாளரான மகேந்திர பிரபு புகார் அளித்துள்ளார். ஆனாலும் காவல்துறையினர் புகாரின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் தனக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளார். இந்த நிலையில் இன்று காலை மின்சார வாரியத்தில் இருந்து பணிகள் செய்வதற்காக பெட்ரோல் பங்கிற்கு மின்சாரத் துறையினர் வந்துள்ளனர் அதனை கண்டித்து மகேந்திரபிரபு அவருடைய தந்தை ஆகியோர் மின் இணைப்பு பணிகளை செய்யக்கூடாது என்று போராட்டத்தில் ஈடுபட்டதால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# மங்களூரு குண்டுவெடிப்பு குற்றவாளிக்கு 10 ஆண்டு சிறை தண்டனை

பெங்களூரு: மங்களூரு குண்டு வெடி ப்பு வழக்கில் முக்கிய குற்றவாளி யா ன முக மது ஷரீக் கிற்கு 10 ஆண்டு சிறை த ண் டனை விதித்து பெ ங் களூரு சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

க ர்நாடக மாநிலம் மங்களூருவில் கடந்த 2022-ல் ஆட்டோவில் குக்கர் குண்டு வெடித் த தில் ஆட்டோ ஓட் டுந ர் பு ருஷோத்தம் பூஜாரி (37) கா யமடைந் தார். அந்த ஆட் டோ வில் குண்டுடன் பய ணித்த மு க்கிய குற்ற வாளி முகமது ஷ ரீக் (24) பலத்த தீக் கா யங்களுடன் தனி யா ர் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து வழக்கு பதிவு செய்த என்ஐஏ அதிகாரிகள் முகமது ஷ ரீக் கிற்கு எதிராக 1200 பக்க குற்றப் பத் திரிக்கை தாக் கல் செ ய்த னர். இவ் வழக்கை விசாரித்த பெங் களூரு சிறப்பு நீ தி ம ன்றம் முகமது ஷ ரீக்கிற்கு கூட்டு சதி, சேதம் விளைவித் தல், தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் குற்றங் க ளை இ ழைத் ததற் காக 10 ஆண்டு சிறை தண்டனை விதித்து உத் தர விட்டது. இ தைய டுத்து அவர் பெ ங்களூரு சிறையில் அடைக்கப் பட்டார்.



# தென்காசி மாவட்டத்தில் தாறுமாறாய் தறிகெட்டு ஓடும் தனியார் பேருந்துகள்



தென்காசி மாவட்டத்தில் தறி கேட்டு ஓடும் தனியார் பேருந்துகளால் அடிக்கடி விபத்துகளும் தேவையில்லாத பிரச்சனைகளும் ஏற்படுகிறது அதேபோன்று மினி பஸ் சேவை என்பது முற்றிலும் கண் துடைப்பு நாடகமாய் நடந்து வருகிறது கொடுக்கப்பட்ட வழித்தடத்தில் செல்லாமல் வழக்கமாக அரசு மற்றும் தனியார் பேருந்துகள் செல்லும் வழியிலேயே மினி பஸ்கள் செல்வதால் அந்தத் திட்டத்தின் நோக்கமே மக்களை சென்றடையவில்லை என்பது தான் முக்கிய பிரச்சினை ஆகும் தனியார் பேருந்துகளில் காற்று ஒலிப்பான் அனுமதிக்கப்பட்ட டெசிபல் அளவுகளை தாண்டி ரோட்டில் செல்லும் பாதசாரிகளையும் இருசக்கர வாகனத்தில் செல்வோரையும் பதட்டமடைய செய்து விபத்துக்கு உள்ளாக்கும் வழியை செய்து வருவதால் போக்குவரத்து அலுவலர் மற்றும் ஆய்வாளர்கள் முறையான ஆய்வு செய்ய வேண்டுமென பொதுமக்கள் விரும்புகின்றனர் இது பற்றிய விவரமாவது தமிழ்நாட்டில் மினி பஸ் (Mini Bus) சேவை அறிமுகப்படுத்தப்பட்டதன் முக்கிய நோக்கம்,போக்குவரத்து வசதி இல்லாத கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு இணைப்பு வழங்குவதாகும்

இதன் முக்கிய நோக்கங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

பேருந்து வசதி இல்லாத அல்லது குறைவான போக்குவரத்து உள்ள கிராமங்களை, அருகிலுள்ள முக்கிய நகரங்கள்,மருத்துவமனைகள், பள்ளி மற்றும் கல்லூரிகளுடன் இணைப்பது.

பயணிகள் வசதி: குறுகிய சாலைகள் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள், தினசரி வேலைக்குச் செல்பவர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களின் பயணத்தை எளிதாக்குவது.

பெரிய பேருந்துகள் செல்ல முடியாத இடங்களுக்கு, 12 முதல் 30 இருக்கை வசதி கொண்ட மினி பஸ்களை இயக்குவதன் மூலம் பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவது.

புதிய வழித்தடங்கள்: 3,100-க்கும் மேற்பட்ட புதிய மினி பஸ் வழித்தடங்கள் மூலம்,1 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு நேரடி போக்குவரத்து வசதியை வழங்குவது.

அதிகப்படியான மேக்சிகேப் (Maxicab) வாகனங்களை முறையாக மினி பேருந்துகளாக மாற்றி, பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வது.

சுருக்கமாகச் சொன்னால், "கடைசி மைல் இணைப்பு" (Last-mile connectivity) மூலம் அனைத்து மக்களுக்கும் போக்குவரத்து வசதியை உறுதி செய்வதே மினி பஸ் சேவையின் முக்கிய நோக்கம் ஆகும்.ஆனால் திட்டத்தின் நோக்கத்தையே சீர்குலைக்கும் வகையில் தென்காசி மாவட்டத்தில் மினி பஸ் சேவை இயங்கி வருகிறது குறிப்பாக கடையநல்லூரில் இருந்து இயக்கப்படும் எந்த மினி பஸ்ஸும் அதற்குரிய வழித்தடத்தில் செல்லாமல் பிராதான சாலைகளின் வழியே செல்வதால் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு இந்த வசதி கிடைக்காமல் செல்கிறது மேலும் தறிகட்டு ஓடும் தனியார் பேருந்துகளால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு பாதசாரிகள் மற்றும் இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்களில் செல்லும் நபர்கள் கைகால் மண்டை உடைந்து மருத்துவமனக்குச் செல்வது சில நேரங்களில் பெரிய அளவில் உயிர் சேதமும் ஏற்படுகிறது அரசு பேருந்துகளில் எல்லாம் இரு வாசல் படியிலும் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளது ஆனால் தனியார் பேருந்துகளில் கதவுகள் அமைக்கப்படாததால் அளவுக்கு அதிகமான பயணிகள் ஏறி தொங்கிச் செல்லும் அவல நிலையும் காணப்படுகிறது குறிப்பாக ராஜபாளையம் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் இருந்து தென்காசி செங்கோட்டை செல்லும் தனியார் பேருந்துகளில் கல்லூரி பாலிடெக்னிக் பள்ளி மாணவர்கள் தொங்கிச் செல்வது வாடிக்கையாக இருந்து வருகிறதுபேருந்து நிலையங்களில் காவல்துறையினர் நின்று அவர்களை வழி நெறிப்படுத்தினாலும் மறுநிமிடம் படிகளில் தொங்கி செல்வதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளனர் ஆகவே அனைத்து தனியார் பேருந்துகளிலும் அரசு பேருந்துகளில் அமைக்கப்பட்டுள்ளது போன்று இரு வாசல்களிலும் கதவுகள் அமைக்கப்படுவதை போக்குவரத்து துறை உறுதி செய்ய வேண்டும் அளவுக்கு அதிகமாக சாலைகளில் செல்லும்போது ஏர் ஹாரன் அடிப்பதை தவிர்க்கும் பொருட்டு வண்டிகளில் டெசிபல் அளவை கண்காணிக்கவேண்டும் என பொதுமக்கள் விரும்புகின்றனர் அரை தூக்கத்தில் இருக்கும் ஆர்டிஓ அலுவலகம் இப்போது விழித்துக் கொள்ளுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

# நாசிக் டிசிஎஸ் விவகாரம்: பாதிக்கப்பட்ட பெண் ஊழியரை மலேசியாவுக்கு கடத்த சதி செய்தது அம்பலம்



நாசிக்: நாசிக்கில் உள்ள டிசிஎஸ் நிறுவனத்தில் பணியாற்றிய பெண் ஊழியர்களை மத மாற்றம் செய்ய முயன்ற விவகாரத்தில், பாதிக்கப்பட்ட பெண்ணை மலேசியாவுக்கு கடத்த சதித் திட்டம் தீட்டப்பட்டது தெரியவந்துள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள டிசிஎஸ் அலுவலகத்தில் பணியாற்றும் பெண்களுக்கு பாலியல் வன்கொடுமை மற்றும் மதம் மாற வற்புறுத்தப்படுவதாக பல்வேறு புகார்கள் எழுந்தன.

இதையடுத்து, காவல்துறை இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணையை தொடங்கியது. இந்த வழக்கில் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் நீடா கான், டிசிஎஸ் நிறுவனத்தில் பணியாற்றிய சக பெண் ஊழியரின் பெயரை ₹ஹனியா' என மாற்ற வற்புறுத்தியதோடு, அவரை இஸ்லாம் மதத்துக்கு மாறும்படி மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

மேலும், வேலை வாய்ப்பு என்ற பெயரில் பாதிக்கப்பட்ட பெண்ணை மலேசியாவுக்கு அனுப்பி, அங்கு இம்ரான் என்பவரிடம் ஒப்படைக்க சதித் திட்டம் தீட்டப்பட்டது விசாரணையின்போது தெரியவந்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், இந்தக் கொலை மிரட்டல் மற்றும் மதமாற்ற முயற்சி வழக்கில் எஸ்சி, எஸ்டி (வன்கொடுமை தடுப்பு) சட்டப் பிரிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

மத மாற்றம் செய்யும் நோக்கத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீடா கான் புர்கா மற்றும் இஸ்லாமிய மத நூல்களை வழங்கியுள்ளார். அவற்றை போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர். அந்தப் பெண்ணின் செல்போனில் சில மத ரீதியான செயலிகளை நிறுவியதுடன், யூடியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் வாயிலாகத் தொடர்ந்து மதப்பிரச்சார வீடியோக்களை அனுப்பி நீடா கான் மூளைச்சலவை செய்ய முயன்றதும் விசாரணையில் அம்பலமாகி உள்ளது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நீடா கானின் சகோதரர் டேனிஷ் ஷேக் மீது பாலியல் வன்கொடுமை புகார் பதிவாகியுள்ளது. ஏற்கெனவே திருமணமான டேனிஷ் ஷேக், அதை மறைத்துப் பாதிக்கப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதாக ஆசை காட்டி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார். உண்மை தெரிந்தவுடன், அந்தப் பெண்ணை மலேசியாவுக்கு அனுப்பிவிடுவதாகக் கூறி மிரட்டியுள்ளனர்.

இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தவுடன் நீடா கான் தலைமறைவாகிவிட்டார்.தான் கர்ப்பமாக இருப்பதாகக் கூறி அவர் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை நீதிமன்றம் கடந்த வாரம் தள்ளுபடி செய்தது. அவரது செல்போனைப் பறிமுதல் செய்து டிஜிட்டல் ஆதாரங்களைச் சேகரிக்க போலீஸார் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை 7 பெண்கள் மற்றும் ஒரு ஆண் என மொத்தம் 8 பேர் புகார் அளித்துள்ளனர். இதன் அடிப்படையில் 8 தனித்தனி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், நீடா கான் உள்ளிட்ட அனைவரையும் டிசிஎஸ் நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# 4வது எஸ்400 கவச வாகனம் இந்தியாவிடம் ஒப்படைப்பு



புதுடெல்லி: இந்தியாவுக்கான 4-வது எஸ்-400 வான் பாதுகாப்பு கவச வாகனத்தை ரஷ்யா அனுப்பி வைத்துள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து அதிநவீன எஸ்-400 வான் பாதுகாப்பு கவச வாகனம் வாங்க கடந்த 2018-ல் மத்திய அரசு ஒப்பந்தம் செய்தது. இதன்படி 5 எஸ்-400 பாதுகாப்பு கவசங்களை ரஷ்யா வழங்க வேண்டும்.

இதுவரை 3 எஸ்-400 பாதுகாப்பு கவசங்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. இவை பாகிஸ்தான், சீன எல்லைப் பகுதிகளில் நிறுத்தப்பட்டு உள்ளன.

இந்நிலையில் 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கையின் ஓராண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, ரஷ்யாவின் நான்காவது எஸ்-400 வான் பாதுகாப்பு கவச வாகனம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது மே மாத மத்தியில் இந்தியத் துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக ₹ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது எஸ்-400 கவச வாகனம் மிகச் சிறப்பாக செயல்பட்டது. இதில் உள்ள ஏவுகணைகள் பாகிஸ்தானில் சிந்து நதிக்குக் கிழக்கே உள்ள எந்தவொரு வான்வழி இலக்கையும், 400 கி.மீ. தொலைவிலிருந்து தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை ஆகும்.

இந்தியா வரவிருக்கும் எஸ்-400 கவச வாகனத்தை ஆய்வு செய்யும் பணி ஏப்ரல் 18-ம் தேதியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து கடந்த வாரம் ரஷ்யாவிலிருந்து கப்பல் மூலம் இது இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பாகிஸ்தானுக்கு எதிரான ஏவுகணைப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இது ராஜஸ்தான் எல்லையில் நிலைநிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவில் இருந்து 5-வது எஸ்-400 பாதுகாப்பு கவசம், இந்த ஆண்டு நவம்பரில் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் ரஷ்யாவிடம் இருந்து மேலும் 5 எஸ்-400 கவச வாகனங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அனில் அம்பானி குழுமத்தின் ரூ.3,034 கோடி சொத்து முடக்கம்



புதுடெல்லி: அனில் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் குழும நிறுவனங்களுக்கு எதிரான சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கு விசாரணையின் ஒரு பகுதியாக ரூ.3,034 கோடி மதிப்புள்ள புதிய சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

அனில் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் குழுமநிறுவனங்கள் வங்கி மோசடியில் ஈடுபட்டது மற்றும் நிதியை முறைகேடாக திசை திருப்பியது தொடர்பான குற்றச்சாட்டுகளை அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது. இந்த வழக்குகளில் அனில் அம்பானி குழுமத்தின் ரூ.19,344 கோடி மதிப்புள்ள சொத்துகளை அமலாக்கத் துறை இதுவரை முடக்கியுள்ளது.

இந்நிலையில் புதிதாக ரூ.3,034 கோடி சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.இந்த சொத்துகள் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் (RCOM) மற்றும் ரிலையன்ஸ் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் (R-Infra) நிறுவனங்களுக்கு சொந்தமானவை என்று அமலாக்கத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றில் மும்பையில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பு, மகாராஷ்டிரா மலைவாசஸ்தலமான கண்டாலாவில் உள்ள ஒரு பண்ணைவீடு, அகமதாபாத் சனந்தில் உள்ள சில நிலப் பகுதிகள் மற்றும் ஆர்-இன்ஃப்ரா நிறுவனத்தின் 7.71 கோடி பங்குகள் உள்ளிட்டவை அடங்கும். பிஎம்எல்ஏ சட்டத்தின் கீழ் இந்த சொத்துகளை முடக்குவதற்கான உத்தரவை அமலாக்கத் துறை பிறப்பித்துள்ளது.

# கோடை வெப்பத்தை தணித்து டெல்லியை குளிர்வித்த திடீர் மழை



புதுடெல்லி: தலைநகர் டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இன்று காலை மழை பொழிவு பதிவானது. இதன் மூலம் கடந்த சில நாட்களாக அங்குள்ள மக்களை வாட்டி வந்த கோடை வெப்பம் சற்று தணிந்துள்ளது.

மழையுடன் காற்றும் மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசியதால் வெப்பநிலை அங்கு சரிந்துள்ளது. இ டெல்லியின் பல்வேறு பகுதிகளில் மழைப் பொழிவு லேசானதாக ஆரம்பமானது. அதைத்தொடர்ந்து திடீரென வானிலை நிலவரம் மாறியது. வானில் கருமேகங்கள் சூழ மழை பொழிவு தொடர்ந்தது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை அன்று 39.2 டிகிரி செல்சியஸ் வெப்பம் டெல்லியில் பதிவானது. கடந்த திங்கட்கிழமை அன்று 42.3 டிகிரி செல்சியஸ் வெப்பமும் பதிவானது. டெல்லியில் வெப்ப அலை வீச வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் மஞ்சள் அலர்ட் கொடுத்திருந்தது.

இந்தச் சூழலில் மேற்கு சுழற்சியில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இன்று அங்கு மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த மழை காரணமாக டெல்லியில் வெப்பநிலை மாறியுள்ளது. இதனால் அங்கு இன்று 27 முதல் அதிகபட்சம் 38 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் நிலவும் என தகவல். மழைப் பொழிவு தொடரவும் வாய்ப்புள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. மழை காரணமாக டெல்லியில் காற்றின் தரமும் சற்று மேம்பட்டுள்ளது.

மத்திய பாகிஸ்தான் மற்றும் ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியாணா உள்ளிட்ட வடமேற்கு பகுதிகளில் நிலவும் சூறாவளி சுழற்சி வடகிழக்கு இந்திய பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால் ஏற்பட்டுள்ள வானிலை மாற்றம் தான் இது என தனியார் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஏப்.30க்குள் சொத்துவரி செலுத்தினால் 5% தள்ளுபடி: சென்னை மாநகராட்சி தகவல்



2026 - 27-ம் நிதியாண்டு தொடங்கிவிட்டதால், மாநகராட்சியில் உள்ள சொத்து உரிமையாளர்கள், அரையாண்டின் முதல் 30 நாட்களுக்குள் அதாவது வரும் ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்குள் முதல் அரையாண்டுக்கான சொத்து வரியைச் செலுத்தினால், மாநகராட்சி சார்பில் சொத்து வரியில் 5 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வரி செலுத்துவதோடு மட்டுமில்லாமல்,அரசு தரும் இந்த தள்ளுபடியை சரியாகப் பயன்படுத்தினால் அதிகபட்சமாக ரூ.5 ஆயிரம் வரை மிச்சப்படுத்தலாம். மேலும் ஒரு சதவீத அபராதத் தொகையையும் தவிர்க்கலாம்.

பொது மக்கள் தங்கள் வரிகளை எளிமையான முறையில் செலுத்த நேரடியாக கணினி வரி வசூல் மையங்கள், https://tnurbanepay.tn.gov.in/ என்ற இணையதளம், டிஎன் அர்பன் இ-சேவை செயலி மற்றும் யுபிஐ செயலிகள் என பல்வேறு வசதிகள் இருக்கின்றன.

ஏப்.30-க்கு இன்னும் 2 நாட்கள் மட்டுமே இருப்பதால் பொதுமக்கள் இந்த சலுகையை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாநகராட்சி அறிவுறுத்தியுள்ளது.

# டிஜிட்டல் கைது முறைகேடு தொடர்புடைய 9,400 வாட்ஸ் அப் கணக்கு முடக்கம்



புதுடெல்லி: நாட்டில் தொடர்ந்து நடைபெறும் டிஜிட்டல் கைது முறைகேடுகள் குறித்து உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் மத்திய உள் துறை அமைச்சகம் சார்பில் தலைமை வழக்கறிஞர் ஆர் .வெங்கடரமணி, உச்சநீதிமன்றத்தில் தற்போதைய நிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது : டிஜிட்டல் கைது முறைகேடுகளைதடுக்கத்தேவையான நடவடிக்கைகளை தொலைத்தொடர்பு நிறுவனங்களும், இணையதளங்களும், வங்கிகளும் எடுத்து வருகின்றன. சிம் கார்டுகளை விரைவாக முடக்குவது, வாட்ஸ்-அப் பயனாளரை பயோமெட்ரிக் முறையில் சரி பார்ப்பது போன்றவை செயல்படுத்தப்பட்டுள்ளன.

டிஜிட்டல் கைது முறைகேட்டில் பயன்படுத்தப்பட்ட 9,400 கணக்குகளை வாட்ஸ்- அப் முடக்கியுள்ளது. டிஜிட்டல் கைது முறைகேட்டில் ஈடுபடும் நபர்கள் பெரும்பாலும் தெற்காசிய நாடான கம்போடியாவில் இருந்து செயல்படுகின்றனர். போலி பயனாளர்களைத் தடுக்க, பயனாளர் பெயர்களை காட்டும் முறை கடந்த ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஷீரடி சாய் பாபா கோயிலில் தவெக தலைவர் விஜய் தரிசனம்




மகாராஷ்டிரா:

தவெக தலைவர் விஜய் திருச்செந்தூர் முருகன் கோயிலில் நேற்று சாமி தரிசனம் செய்த நிலையில், மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள சீரடி சாய்பாபா கோயிலில் சாமி தரிசனம் செய்தார்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் விரைவில் வெளியாக உள்ள நிலையில்,தவெக தலைவர் விஜய் தற்போது ஆன்மீக தளங்களுக்குச் சென்று சாமி தரிசனம் செய்து வருகிறார். நேற்று (ஏப்ரல் 28) தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள உலகப் புகழ் பெற்ற முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் வீடான தி ரு ச் செ ந் தூ ர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார். மேலும்,அங்கு சத்ருசம்ஹார யாகத்தை அவர் நடத்தினார்.

இதனைத்தொடர்ந்து, மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள உலக புகழ் பெற்ற சீரடி சாய்பாபா கோயிலில் விஜய் இன்று சாமி தரிசனம் செய்தார். இதற்காக இன்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் புறப்பட்ட அவர், அஹில்யநகரம் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார். அதைத்தொடர்ந்து, காரில் சாலை மார்க்கமாக பயணித்த அவர் மதியம் 1 மணி அளவில் சீரடி சாய்பாபா கோயிலை அடைந்தார். சாய்பாபா சன்னதிக்கு முன்நின்றுகீழேகுனிந்து பயபக்தியுடன் சாமி தரிசனம் செய்தார்.

உலகஅளவில் மிகவும் புகழ்பெற்ற கோயிலாக சீரடி சாய்பாபா கோயில் உள்ளது. ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான பக்தர்கள் இக்கோயிலுக்கு வருகை தருகிறார்கள். அரசியல் தலைவர்கள், சினிமா நட்சத்திரங்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் இக்கோயிலுக்கு வருவதை வழக்கமாகக்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு எண்ணிக்கை ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து மே 4-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது. தேர்தல் முடிவுகள் வெளியாக இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில், தேர்தலில் வெற்றி பெற்று அரியணை ஏறப்போவது யார் என அறிந்துகொள்ளத் தமிழக மக்கள் ஆர்வத்துடன் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் பவானி கூடுதுறையில் சித்திரை தேர்த்திருவிழா கடந்த 22ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்வாக ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீஆதிகேசவ பெருமாள் திருக்கல்யாணம் நடைபெற்றது. சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய பெருமாளுக்கு வேத மந்திரங்கள் முழங்க, பல்வேறு சம்பிரதாயங்களுடன் திருமாங்கல்ய தாரணம் நடைபெற்றது. இவ்விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

### ஈரோடு தாலுக்கா காவல் நிலையம்

# மது அருந்த பணம் கேட்டு பெட்ரோல் குண்டு வீசிய நபர் கைது

## தனியார் தொலைக்காட்சியில் பெட்ரோல் குண்டு வீச்சு கலாச்சாரம் தலைதூக்கி உள்ளது என்ற செய்தி குறித்த மறுப்பு செய்தி

ஈரோடு தாலுக்கா காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட 46-புதூர், கரும்பாறை, எம்.ஜி.ஆர். நகரில் வசித்து வரும் ராமாயி என்பவரிடம் அவரது பேரனான சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுக்கா, பூலாம்பட்டி, கூடக்கல் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்பவரின் மகன் கோகுல் (23) என்பவர் அடிக்கடி தனது பாட்டி வீட்டில் தங்குவதும் மற்றும் மதுஅருந்த பணம் கேட்டு தொந்தரவு செய்வது வழக்கம் என்றும், அதேபோல் கடந்த 26.04.2026-ம் தேதி இரவு 10.00 மணிக்கு தனது பாட்டி ராமாயி வீட்டிற்கு வந்த மேற்படி கோகுல் ராமாயிடம்பணம்கேட்டு வாய்த்தகராறு செய்து ராமாயியை மிரட்டும் நோக்கில் பெட்ரோல் ஊற்றி திரி போட்டு வைத்திருந்த குவாட்டர் மதுபாட்டிலை எடுத்து தீப்பற்ற வைத்து, தரையில் வீசியுள்ளார். அதிலிருந்து தீப்பற்றிய திரி பக்கத்து வீட்டில் வசிக்கும் சாந்தி என்பவரின் வீட்டின் முன்பு தரையில் விழுந்துள்ளதால், அருகில் வசிப்பவர்கள் சத்தம்போட மேற்படி கோகுல் தப்பி ஓடிவிட்டதாகவும், இது சம்மந்தமாக ராமாயின் மருமகனான மருதமுத்து மகன் அரசகுமார் (55) என்பவர் கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி சம்பவத்தில் எதிரி கோகுல் தனது உறவினர்களை மிரட்டும் நோக்கத்தில் பெட்ரோல் நிரப்பிய பாட்டிலில் திரியை போட்டு அதை பற்றவைத்து தரையில் வீசியுள்ளார். இரவில் நடந்த இச்சம்பவம் குறித்து 27.04.2026-ம் தேதி மதியம் 13.30 மணிக்கு காலதாமதமாக புகார் அளித்த நிலையில், இந்த வழக்கில் குற்றவாளி துரிதமாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார்.

மேலும் எதிரி தனது பாட்டியிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்தது தொடர்பாக இதுவரை எவ்வித புகாரும் இல்லை. இந்நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பாக தனியார் தொலைக்காட்சி விரைவு செய்தியில் "ஈரோட்டில் உறவினருடன் போதையில் ஏற்பட்ட தகராறில் பெட்ரோல் குண்டு வீசிய இளைஞர் சிக்கினார். காவல் துறை உரிய நடவடிக்கை எடுக்காததால் பெட்ரோல் குண்டு வீச்சு கலாச்சாரம் தலைதூக்கி உள்ளதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு" என மிகைப்படுத்தப்பட்ட செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது.




ஈரோடு மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், காலை 10மணி முதல் 3மணி வரை தேவையில்லாமல் பொதுமக்கள் யாரும் வெளியே வரவேண்டாம் எனவும் ,வெப்ப நோய் பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிக்க ஈரோடு அரசு மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. 5 படுக்கைகளுடன் கூடிய இந்த சிகிச்சை பிரிவில் 24 மணி நேரமும் மருத்துவர் மற்றும் செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.




ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரவுண்டானா முன்பு பொதுமக்களுக்கும், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டிகளுக்கு சாலைகளில் செல்லும் போது தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிவதன் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை விளக்கும் துண்டு பிரசுரங்களை ஈரோடு தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் முருகேசன் வழங்கினார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (29.04.2026) வாக்கு எண்ணும் மையமானசித்தோடுஅரசினர்பொறியியல்கல்லூரியில்தமிழ்நாடுசட்டமன்றபொதுத்தேர்தல்2026ல்பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM & VVPAT) சீல் இடப்பட்டு, மூன்றடுக்கு பாதுகாப்பு வசதியுடன் கண்காணிப்பு கேமிராக்கள் மூலம் எல்.இ.டி.தொலைக்காட்சிகளில் கண்காணிக்கப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார் உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி உள்ளார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (29.04.2026) 106 கோபிசெட்டிபாளையம் மற்றும் 107 பவானிசாகர் (தனி) ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையமான கோபிசெட்டிபாளையத்தில் உள்ள கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ல் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM & VVPAT) சீல் இடப்பட்டு, மூன்றடுக்குபாதுகாப்புவசதியுடன்கண்காணிப்புகேமிராக்கள்மூலம்எல்.இ.டி.தொலைக்காட்சிகளில்கண்காணிக்கப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி உள்ளார்.

# No more Mr. Nice Guy: Trump tells Iran to get smart soon in new warning




*Trump on Wednesday appeared to issue another warning to Iran, stating that the Islamic Republic will no longer be dealing with "Mr. Nice Guy."*

*US President Donald Trump on Wednesday appeared to issue another warning to Iran, stating that the Islamic Republic will no longer be dealing with "Mr. Nice Guy."*

*"Iran can't get their act together. They don't know how to sign a non-nuclear deal. They better get smart soon!," the Republican leader wrote on his social media platform Truth Social.*

*The warning from Trump comes along with an edited picture of the US president carrying an assault rifle.*

*This post from Trump also comes hours after he claimed that Iran is "in a state of collapse."*

*"They want us to 'Open the Hormuz Strait,' as soon as possible, as they try to figure out their leadership situation (Which I believe they will be able to do!)," said Trump.*

*US-Iran peace talks in limbo*

*The peace talks between the United States and Iran have been stalled, especially after Trump stated that he would not send an American delegation to Pakistan.*

*Trump's remarks came after the Iranian delegation, led by Foreign Minister Abbas Araghchi, arrived in Pakistan. The Iranian leader conducted talks with his Pakistani counterpart, Ishaq Dar, and Army chief Field Marshal Asim Munir.*

*Meanwhile, Trump first stated that Vice President JD Vance will not be attending the talks and that the second round will be led by special envoy Steve Witkoff and Jared Kushner.*

*However, Trump later told reporters that he will not be sending anyone, as "they do not have a plan" and a trip to Pakistan without any plan for negotiations is expensive."*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.